


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.1.2025) தலைமைச் செயலகத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை சார்பில் சென்னை எழும்பூரில் உள்ள கோ – ஆப்டெக்ஸ் வளாகத்தில் 227 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஒருங்கிணைந்த வளாகத்திற்கு (Unity Mall) அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை செயலாளர் திருமதி.வே. அமுதவல்லி, கோ – ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் தீபக் ஜேக்கப் ஆகியோர் கலந்துகொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.01.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில், 2024 – 2025 ஆம் நிதியாண்டிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 1,250 கிராமப்புறத் திருக்கோயில்கள் மற்றும் 1,250 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகளை மேற்கொள்ள உயர்த்தப்பட்ட நிதியுதவி தலா 2.50 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 62.50 கோடி ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 12 திருக்கோயில்களின் நிர்வாகிகள் மற்றும் பூசாரிகளிடம் திருப்பணிக்கான வரைவோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞான பால்ய சுவாமிகள், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அரசியல் மயமாகும் ஆளுநர் பதவியின் கண்ணியம் காத்திட நடத்தை விதிகளை உருவாக்கிட வேண்டும்!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற கழக எம்.பி.க்கள் கூட்டத்தில் தீர்மானம்... முதல் பக்கத் தொடர்ச்சி

அரசியல் நிர்ணய சபை எதிர்பார்த்தது. ஆனால் ஆளுநர் ரவி நியமனத்தில் அது தவிடுபொடியாகிப் போனது என்பதை இந்த எம்.பி.க்கள் கூட்டம் மிகவும் வேதனையுடன் பதிவு செய்ய விரும்புகிறது.

சமீபத்தில் உச்சநீதிமன்ற நீதிபதி நாகரத்னா அவர்கள், "இந்தியாவில் உள்ள ஆளுநர்கள் எங்கு செயல்படக் கூடாதோ அங்கு செயல்படுகிறார்கள். எங்கு செயல்பட வேண்டுமோ அங்கு செயல்படாமல் இருக்கிறார்கள்" எனக் குறிப்பிட்டு, "ஆளுநர்கள் பற்றிய வழக்குகள் நீதிமன்றங்களுக்கு வருவது சோக கதை" என்றார். (Governors in India were playing a role where thery ought not to be and were inactive when they should be playing an active role. Cases coming to the court on Governors is a sad Story).

**தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடும் ஆளுநர் ரவி!**

இந்த கருத்திற்கு முற்றிலும் பொருத்தமான ஒரு ஆளுநராக தமிழ்நாடு ஆளுநர் ரவி இருப்பது உள்ளபடியே தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடும் விதமாக அமைந்துள்ளது. அவர் தமிழ்நாட்டின் வளர்ச்சியைக் கெடுக்கவே ஆளுநராக அமர்ந்து இருக்கிறார்.

குடியரசு தினத்தில் கூட அரசியல் செய்வதை அவர் விட்டு வைக்கவில்லை. எந்த எதிர்க்கட்சியும் கூட குடியரசு தின வாழ்த்தில் அரசை குறை கூறுவதில்லை. ஆனால் "By order of Governor" என ஒவ்வொரு ஆணையும் வெளிவரும் தன் அரசையே குடியரசு தின வாழ்த்தில் குறை சொல்லி நாட்டின் பெருமையை தமிழ்நாட்டின் சிறப்பை சிறுமைப்படுத்தி யதற்கு இக்கூட்டம் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது.

ஆளுநர் பதவி நீக்கப்படும் வரை அரசியல் மயமாகும் ஆளுநர் பதவியின் கண்ணியத்தைக் காத்திட ஆளுநர் ஒருவர் எப்படிச் செயல்பட வேண்டும் என்ற நன்னடத்தை விதிகளை (Code of Conduct) உருவாக்கிட வேண்டும் என்றும், மாநில அரசின் கோப்புகள், சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்படும் மசோதாக்கள் ஆகியவற்றில் கையெழுத்திட ஆளுநருக்கு காலநிர்ணயம் (Time Frame) செய்ய வேண்டும் என ஏற்கனவே தமிழ்நாடு அரசின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு நிலுவையில் உள்ள அந்த கோரிக்கையையும் நடைபெற இருக்கும் பாராளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத் தொடரில் வலியுறுத்திட இந்த எம்.பி.க்கள் கூட்டம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் : 2**

**மக்களின் துணையுடன் அரசு ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் ஒன்றிய பா.ஜ.க. அரசை பணிய வைத்து டங்ஸ்டன் கனிமச் சுரங்க ஏலத்தை ரத்து செய்ய வைத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் துணை நின்ற மக்களுக்கும் நன்றி!**

மக்களின் துணையுடன் அரசு ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் கடும் அழுத்தம் கொடுத்து மதுரை அரிட்டாப்பட்டியில் அமையவிருந்த டங்ஸ்டன் கனிம சுரங்கத்தை தடுத்து நிறுத்தி



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (29.1.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், நாடாளுமன்றத்தில் 2025–2026 ஆம் ஆண்டிற்கான ஒன்றிய நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படவுள்ளதையொட்டி கழக நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், கழக மக்களவை குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, கழக துணை பொதுச் செயலாளரும், வனத்துறை அமைச்சருமான முனைவர் க. பொன்முடி, கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தலைமைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மூன்றே மாதங்களில் கொடுத்த அனுமதியை ஒன்றிய அரசே ரத்து செய்ய வைத்து வெற்றி வாகை சூடிய வணிகர்கள் உள்ளிட்ட போராடிய அனைத்து மக்களுக்கும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் இக்கூட்டம் நன்றியினையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.

இந்த கனிம சுரங்க அனுமதி கொடுக்க கூடாது என தமிழ்நாடு அரசின் மூலம் 3.10.2023இல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது. 23.11.2024, வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் சார்பில் கடையடைப்பு நடத்திய போது அமைச்சர் மூர்த்தி அவர்கள் அரசின் சார்பில் "கனிமச் சுரங்கத்தை தமிழ்நாடு அரசு நிச்சயம் அனுமதிக்காது" என உறுதிமொழி அளிக்கப்பட்டது. உடனே ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதினார் முதலமைச்சர் அவர்கள். இதைத் தொடர்ந்து தமிழ்நாடு சட்டமன்றத்தில இக் கனிம சுரங்க திட்டத்த ரத்து செய்ய வேண்டும் என 9.12.2024 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**டங்ஸ்டன் சுரங்க அனுமதி ரத்து! முதல்வர் நடவடிக்கைக்கு நன்றி!**

இவற்றிற்கு எல்லாம் உச்சகட்டமாக, "தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருக்கும் வரை இந்த கனிம சுரங்க திட்டத்தை அனுமதிக்க மாட்டேன்" என்ற முதலமைச்சர் அவர்களின் பேச்சு, போர்ப்பிரகடனமாகவே அமைந்திருந்தது. இவை அனைத்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசை தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளின் முன்பு அடிபணிய வைத்தது. டங்க்ஸ்டன் கனிம சுரங்க அனுமதி ரத்து செய்யப்பட்டுள்ளது என்ற ஒன்றிய அரசின் அறிவிப்பானது ஜனநாயக ரீதியில் மாநில உரிமைகளை பாதுகாக்கும் திராவிட மாடல் அரசின் போராட்டத்திற்கு கிடைத்துள்ள மாபெரும் வெற்றி என்றே இக்கூட்டம் பதிவு செய்ய விரும்புகிறது. மக்கள் நலனைக் காக்க இறுதி வரை உறுதியாக இருந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டுதல்களை இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் : 3**

**"உருக்கு இரும்பு 5370 ஆண்டுகளுக்கு முன்னாலேயே தமிழ் நிலத்தில் அறிமுகமாகியுள்ளது" என உலகுக்கு அறிவித்த திராவிட மாடல் அரசின் சாதனையை ஒன்றிய அரசும், பிரதமரும் முன்னெடுக்க வேண்டும் என இக்கூட்டம் வலியுறுத்துகிறது!**

"இரும்பின் தொன்மையை நாட்டுக்கு அறிவித்தல்" "இரும்பின் தொன்மை நூலை வெளியிடுதல்" "கீழடி திறந்தவெளி அருங்காட்சியகம்" "கங்கை கொண்ட சோழபுரம் அருங்காட்சியகம்" ஆகியவற்றுக்கு அடிக்கல் நாட்டுதல், "கீழடி இணையத் தளத்தை தொடங்கி வைத்தல்" என தமிழ் பண்பாட்டை உலகுக்கு எடுத்துச் செல்லும் "ஐம்பெரும் விழாவை" நடத்தி "உருக்கு இரும்பு தொழில்நுட்பம் 5370 ஆண்டுகளுக்கு முன்னாலேயே தமிழ் நிலத்தில் அறிமுகமாகிவிட்டது " என்று உலகிற்கு அறிவித்து தமிழ்நாட்டின் சிறப்பை வெளிப்படுத்தியுள்ளதோடு இந்தியாவின் வரலாறு தமிழ் மண்ணிலிருந்தே எழுதப்படும் சூழலை உருவாக்கியுள்ள திராவிட மாடல் அரசின் கதாநாயகன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் மனமார்ந்த பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கிறது.

**தமிழ்நாட்டின் தொன்மை நிகழ்வை ஒன்றிய அரசு முன்னெடுக்க வேண்டும்!**

தமிழ் மண்ணின் இந்த கண்டுபிடிப்பை இந்திய தேசிய காங்கிரஸின் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி அவர்கள் பாராட்டியிருப்பதற்கு நன்றி தெரிவிக்கும் இக்கூட்டம் ஒன்றிய அரசு சார்பில் தமிழ்நாடு அரசின் இந்த முயற்சியை முன்னெடுக்கவில்லை என்பதை வேதனையுடன் பதிவு செய்வதோடு, ஒன்றிய அரசும், பிரதமர் அவர்களும் தமிழ்நாட்டின் தொன்மை பற்றிய இந்த நிகழ்வை முன்னெடுக்க வேண்டும் என இந்த எம்.பி.க்கள் கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் : 4**

**கூட்டாட்சி தத்துவம் மாநில கல்வி உரிமை உயர் கல்வி அனைத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் பல்கலைக்கழக நிதி நல்கை குழுவின் வரைவு நெறிமுறைகளை திரும்ப பெறக் கோரி கழக மாணவரணி கழக எம்.பி.க்கள் போராட்டம்!**

மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்களை ஆளுநரே நியமிக்கும் அதிகாரத்தை வழங்கி பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு வெளியிட்டுள்ள வரைவு நெறிமுறைகளை திரும்ப பெற வேண்டுமென வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்றத்தில் 9.1.2025 அன்று தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றி மாநிலத்தின் கல்வி உரிமையை நிலைநாட்டியுள்ள முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கிறது.

**உயர்கல்வியை பாழ்படுத்த ஒன்றிய பா.ஜ.க. அரசு முயற்சி!**

நீட் தேர்வு மூலம் தமிழ்நாட்டு இளைஞர்களின் மருத்துவக் கனவை சிதைத்து, பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியையும் பாழ்படுத்தி ஒன்றியத்தில் ஆட்சியிலிருக்கும் பா.ஜ.க.வினரின் கொள்கைகளை மாநிலங்களிலும் கொண்டுவர மேற்கொள்ளப்படும் இந்த வரைவு நெறிமுறைகளையும், இளங்கலை மற்றும் முதுகலைப் படிப்புகளில் கற்கை முறைகளுக்கு குறைந்தபட்ச வரைவு நெறிமுறைகள், 2024 மற்றும் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் ஆசிரியர்கள், கல்விப் பணியாளர்கள் நியமனம் மற்றும் பதவி உயர்வு குறித்து வெளியிட்ட வரைவு நெறிமுறைகள் 2025 ஆகியன தேசியக் கல்விக் கொள்கை 2020ன் அடிப்படையில் உள்ளதோடு, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை கோட்பாடான கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது மட்டுமல்ல குறிப்பாக தமிழ்நாட்டின் உயர் கல்வி முறைக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது என்பதால்

இந்த வரைவு நெறிமுறைகளை திரும்ப பெறக்கோரி, கழகத் தலைவர் அவர்கள் அறிவித்துள்ளதற்கு ஏற்ப கழக மாணவரணியின் சார்பில் 06.02.2025 அன்று போராட்டம் நடத்தப்படும் என்றும், கழக எம்.பி.க்கள் டெல்லியில் போராட்டம் நடத்துவார்கள் என்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் : 5**

**சிறுபான்மையினரின் நலனை பாதிக்கும் வக்ப் சட்ட திருத்த மசோதாவை நிறைவேற்றத் துடிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு கண்டனம்!**

சிறுபான்மையினரின் நலனைப் பாதிக்கும் வக்ப் சட்ட திருத்த மசோதா 2024யை கொண்டு வந்து நாடாளுமன்றக் கூட்டுக் குழுவிலும் முறைப்படி விவாதம் நடத்தாமல் எதிர்க்கட்சி உறுப்பினர்களை எல்லாம் வெளியேற்றி ஆரோக்கியமான விவாதமே பாராளுமன்ற ஜனநாயகத்தின் அடிநாதம் என்பதை மறந்து எதிர்க்கட்சிகள் அளித்த 44 திருத்தங்களையும் ஏற்காமல் அவசர அவசரமாக டெல்லித் தேர்தலை மனதில் வைத்து ஒன்றிய பா.ஜ.க. அரசு நிறைவேற்ற துடிப்பதற்கு இந்த எம்.பி.க்கள் கூட்டம் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது.

**வக்ஃபு சட்ட திருத்த மசோதாவை நிவைறேற்றத் துடிக்கும் பா.ஜ.க.!**

இச்சட்டத் திருத்தம் மீண்டும் அவையில் கொண்டு வரப்படும்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கழக தலைவரின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப தீவிரமாக எதிர்த்து வாக்களித்திட இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் : 6**

**தமிழ்நாடு என்ற வார்த்தையே இல்லாமல் கடந்த நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்த ஒன்றிய பா.ஜ.க. அரசு, இந்த முறை தமிழ்நாட்டின் திட்டங்கள், பேரிடருக்கு நிதி ஒதுக்கீடும், மாநிலத்திற்கு முத்திரைத் திட்டங்கள் மற்றும் புதிய ரயில்வே திட்டங்களையும் அறிவித்திட வேண்டும்!**

ஒன்றிய பா.ஜ.க. அரசின் நிதி நிலை அறிக்கைகளில் இதுவரை தமிழ்நாட்டிற்கு முத்திரைத் திட்டங்கள் எதையும் அறிவிக்கவில்லை. ரயில்வே திட்டங்களில் தமிழ்நாடு அடியோடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. நிதி ஒதுக்கீட்டிலும் தமிழ்நாடு வஞ்சிக்கப்படுகிறது. நம் மாநிலம் நேரடி வரியாக ஒன்றிய அரசுக்கு 100 ரூபாய் கொடுத்தால், நம் மாநிலத்திற்கு 29 ரூபாய் மட்டுமே திருப்பித் தரப்படுகிறது. ஆனால் 100 ரூபாய் கொடுக்கும் பா.ஜ.க. ஆளும் அஸ்ஸாம் மாநிலத்திற்கு 354 ரூபாயும், உத்தரபிரதேச மாநிலத்திற்கு 333 ரூபாயும், மத்திய பிரதேசத்திற்கு 279 ரூபாயும், ஒன்றிய ஆட்சியை தக்க வைக்க உதவும் கூட்டணிக் கட்சி ஆளும் பீஹார் மாநிலத்திற்கு 922 ரூபாயும் திருப்பி கொடுக்கிறார்கள் என்றால் தமிழ்நாடும் தமிழ்நாடு மக்களும் நிதி ஒதுக்கீட்டில் எவ்வளவு மோசமாக வஞ்சிக்கப்படுகிறார்கள் என்பது வெட்ட வெளிச்சமாகிறது.

**தமிழ்நாடு என்ற வார்த்தையே இல்லாமல் நிதி நிலை தாக்கல்!**

இதே நிலைதான் வருவாய் பகிர்வு மற்றும் மானியப் பகிர்வு அனைத்திலும் நீடிக்கிறது. தமிழ்நாடு அனைத்து வகை நிதி ஆதாரத்திலும் ஒன்றிய அரசால் புறக்கணிக்கப்படுகிறது என்பதை இக்கூட்டம் வேதனையுடன் பதிவு செய்கிறது.

கடந்த நிதி நிலை அறிக்கையை தமிழ்நாடு என்ற பெயரே இல்லாமல் தாக்கல் செய்த ஒன்றிய பா.ஜ.க. அரசு இந்த முறை நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு நிலுவையில் உள்ள மெட்ரோ ரயில் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு நிதி, பேரிடர் நிதி உள்ளிட்டவற்றை ஒதுக்கீடு செய்யதிடவும், தமிழ்நாட்டிற்கு என்று முத்திரைத் திட்டங்கள் மற்றும் புதிய ரயில்வே திட்டங்களை அறிவித்திடவும் ஒன்றிய பா.ஜ.க. அரசை இந்த கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

"அரசின் கொள்கை முடிவுகளை நிறைவேற்ற முழுமையாக ஒத்துழைப்பு கொடுத்து துணை நிற்க வேண்டிய அரசியலுக்கு அப்பாற்பட்டவரை ஆளுநராக நியமிக்க வேண்டும்" என அரசியல் நிர்ணய சபை எதிர்பார்த்தது. ஆனால் ஆளுநர் ரவி நியமனத்தில் அது தவிடுபொடியாகிப் போனது என்பதை இந்த எம்.பி.க்கள் கூட்டம் மிகவும் வேதனையுடன் பதிவு செய்ய விரும்புகிறது.